# March 6, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கேரள உயர்நீதிமன்ற நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(i) சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா வியாமுக்கிழமை (மார்ச் 5) பணியில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில், நீதிபதி தர்மாதிகாரியின் நியமன அறிவிப்பு அரசிதழிலும் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

2. அண்டை நாடான நேபாளத்தில் புதிய பிரதமரைத் தேர்ந் தெடுப்பதற்கான நாடாளுமன்றத் தேர்தல் அமைதியான முறையில் நடந்து முடிந்தது.

(i) கடந்த ஆண்டு செப்டம்பரில் இளம் தலைமுறையினர் நடத்திய தீவிர போராட்டத்தினால், முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான கூட்டணி அரசு கவிழ்ந்த பிறகு இந்த முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் நடைபெற்றுள்ளது.

(ii) தேர்தல் நடைமுறை:

- நேபாள நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையின் 275 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது.
- இதில் 165 உறுப்பினர்கள் நேரடி தேர்தல் மூலமும், எஞ்சிய 110 உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். நேரடி தேர்தலுக்காக 65 கட்சிகளைச் சேர்ந்த 3,400-க்கும் மேற்பட்ட வேட்பாளர்களும், விகிதாசார பிரதிநிதித்துவமுறைக்கு 3,135 வேட்பாளர்களும் போட்டியில் உள்ளனர்.

3. சோமாலியாவில் அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 4 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீட்டிக்கும் வகையில் அந்நாட்டு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(i) நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 329 உறுப்பினர்களில் 222 பேர் இந்தச் சட்டத்திருத் தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

(ii) இதன்மூலம், வரும் மே மாதம் திட்டமிடப்பட்ட பொதுத் தேர்தல் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(iii) நீண்டகாலமாக நிலுவையில் இருந்த அரசமைப்புச் சட்டப் பணிகள் அதிகாரபூர்வமாக நிறைவடைந்துள்ளதாக அதிபர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

4. அமெரிக்காவுடனான போட்டி மற்றும் உலக நாடுகளிடையே நிலவும் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு, சீனா தனது ராணுவத்தை நவீனப்படுத்த இந்த ஆண்டு பாதுகாப்பு பட்ஜெட்டை 7 சதவீதம் உயர்த்தியுள்ளது.

(i) சீன நாடாளுமன்றத்தில் அரசின் வருடாந்திர அறிக்கையை பிரதமர் லீ கியாங்

தாக்கல் செய்தார். அதன்படி, பாதுகாப்புத் துறைக்கு சுமார் 1.91 லட்சம் கோடி யுவான் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.25.4 லட்சம் கோடி) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) சீனாவின் இந்த பிரம்மாண்ட ராணுவ நிதிஒதுக்கீடு, இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், சீனாவின் பட்ஜெட் இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட்டைவிட மூன்று மடங்கு அதிகமாகும்.

(iii) பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்துள்ள அதேநேரம், சீனா தனது பொருளாதார வளர்ச்சி இலக்கை 4.5 முதல் 5 சதவீதமாக குறைத்துள்ளது.

(iv) அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தின் வர்த்தக வரி யுத்தம், அமெரிக்கா-ஈரான் மோதலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடி மற்றும் உள்நாட்டில் நிலவும் ரியல் எஸ்டேட் சரிவு போன்ற காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக 5 சதவீத வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்த சீனா, தற்போதைய சவால்களால் முதல்முறையாக இந்த இலக்கைக் குறைத்துள்ளது.

(v) ராணுவக் கட்டுப்பாடு:

- ராணுவ நவீனமயமாக்கலுக்கு இடையே, சீன ராணுவத்தில் நிலவும் ஊழலை ஒழிக்க அதிபர் ஷி ஜின்பிங் அதிரடி நடவடிக் கைகளை எடுத்து வருகிறார்.
- 'ராணுவம் என்பது கம்யூனிஸ்ட்கட்சியின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.ஒழுங்கு நடவடிக்கைகளில் எந்தவிதமான சமரசமும் செய்யப்படாது' என்று பிரதமர் லீ கியாங் தனது உரையில் உறுதி படதெரிவித்துள்ளார்.

(vi) தைவான் விவகாரத்தில் கண்டிப்பு:

- தைவான் விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை சீனா மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு வரை 'தைவான் பிரிவினைவாதத்தை எதிர்ப்போம்' என்று மென்மையாகக் கூறி வந்த சீனா, இந்த ஆண்டு 'உறுதியுடன் ஒடுக்குவோம்' என்ற கடுமையான வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளது.
- இதனால் வரும் காலங்களில் தைவான் எல்லையில் சீனாவின் ராணுவ அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்பு மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

5. மதுரை மாவட்ட விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் அகாதெமியை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்தார்.

(i) மதுரை மாவட்டத்தில் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் ஒலிம்பிக் அகாதெமி அமைக்கப்படும் என தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்தது.

(ii) இதன்படி, மதுரை மாவட்ட விளையாட்டரங்கில் ரூ.6 கோடியில் கபடி ஆடுகளம், 200 பார்வையாளர்கள் இருக்கைகளுடன் கூடிய 6 டேபிள் டென்னிஸ் களம்,

போட்டியாளர்களுக்கான உடை மாற்றும் அறைகள், நவீன வசதிகளுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம், செயற்கை தரையமைப்புடன் கூடிய கூடைப்பந்து ஆடுகளம், டென்னிஸ் ஆடுகளம் ஆகியவற்றுடன் கூடிய ஒலிம்பிக் அகாதெமி வளாகம் கட்டப்பட்டது.

6. நான்கு நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்த பின்லாந்து அதிபர் அலெக்ஸாண்டர் ஸ்டப், தில்லியில் பிரதமர் மோடியுடன் இருதரப்புப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்.

(i) பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பம்:

- வர்த்தகம் முதலீடு, பாதுகாப்பு, முக்கியத் தொழில் நுட்பங்கள், திறன்மேம்பாடு, தூய எரிசக்தி உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்தனர். பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதித்தனர். மேற்காசிய போர் குறித்து முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது.
- இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, அதிகாரபூர்வ புள்ளி விவரங்கள், பரஸ்பர இடப்பெயர்வு, சுற்றுச்சூழல் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(ii) பாதுகாப்பு முதல் முக்கிய கனிமங்கள் வரை:

பின்னர், பிரதமர் மோடி, அதிபர் அலெக்ஸாண்டர் ஸ்டப் ஆகியோர் செய்தியாளர்களுக்கு கூட்டாக பேட்டியளித்தனர். அப்போது, பிரதமர் மோடி கூறியதாவது:

- எண்மமயமாக்கல் மற்றும் நிலைத்தன்மையில் இந்திய-பி லாந்து உறவு'உத்திசார் கூட்டணி' வடிவம் பெற்றுள்ளது. இது, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், 6ஜி தொலைத்தொடர்பு, தூய எரிசக்தி, குவாண்டம் கம்ப்யூட்டிங் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை ஊக்கு விக்கும்.
- பாதுகாப்பு, விண்வெளி, செமிகண்டக்டர், முக்கியக் கனிமங்கள் போன்ற முக்கியத் துறைகளிலும் ஒத்துழைப்பை விரிவுபடுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது

(iii) ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர இடம் பெறுவதற்கான இந்தியாவின் முயற்சியை பின்லாந்து ஆதரிக்கிறது.

7. கனேடிய பிரதமர் மார்க் கார்னியின் வருகையைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவுகளில் குறிப்பிடத்தக்க ராஜதந்திர மாற்றம் மற்றும் வலுப்படுத்துதல்.

(i) ராஜதந்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம்

- முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் ஆட்சிக் காலத்தில் நிலவிய நெருக்கடியான பொது அனுபவத்தில் இந்தப் பயணம் ஒரு பெரிய

முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

- பிரதமர் கார்னியின் நான்கு நாள் இந்திய அரசுப் பயணம், இரு நாடுகளுக்கும் மூலோபாய மற்றும் பொருளாதார நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அவசியமானதாக விவரிக்கப்படுகிறது.
- ஹர்தீப் சிங் நிஜ்ஜார் வழக்கு தொடர்பான ட்ரூடோவின் முந்தைய குற்றச்சாட்டுகளால் ஏற்பட்ட "கசப்பை" கடந்து செல்வதை கார்னியின் அணுகுமுறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(ii) சிவில் அணுசக்தி மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பு

- சிவில் அணுசக்தித் துறையில் ஒரு முக்கிய ஒப்பந்தம் எட்டப்பட்டது. 2027 மற்றும் 2035 க்கு இடையில் இந்தியாவிற்கு சுமார் 2.2 கோடி பவுண்டுகள் யுரேனியத்தை வழங்க கனடா உறுதியளித்துள்ளது.
- இந்த அணுசக்தி ஒப்பந்தம் 2.6 பில்லியன் டாலர்கள் (தோராயமாக ₹23,833 கோடி) மதிப்புடையது.
- பசுமை ஹைட்ரஜன், ஹைட்ரோகார்பன்கள் மற்றும் மேம்பட்ட எரிசக்தி சேமிப்பு தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்..

(iii) வர்த்தகம் மற்றும் முதலீட்டு இலக்குகள்

- இரு நாடுகளும் 2030 ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 50 பில்லியன் டாலர்களாக (தோராயமாக ₹4.58 லட்சம் கோடி) அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளன.
- சுதந்திர வர்த்தக சூழலை உருவாக்க விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தை (CEPA) விரைவுபடுத்துவதில் மீண்டும் கவனம் செலுத்தப்படுகிறது.
- இந்திய சந்தையில் கனடாவின் நம்பிக்கையை எடுத்துக்காட்டும் வகையில், கனேடிய ஓய்வூதிய நிதிகள் ஏற்கனவே 100 பில்லியன் டாலர்களை (தோராயமாக ₹9.15 லட்சம் கோடி) இந்தியாவில் முதலீடு செய்துள்ளன.

(iv) மூலோபாய மற்றும் உலகளாவிய சூழல்

- ஜனாதிபதி டிரம்பின் கீழ் அமெரிக்காவின் ஆக்ரோஷமான வர்த்தகம் மற்றும் கட்டணக் கொள்கைகள் இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகளை சுயாதீனமான இருதரப்பு வர்த்தகத் தொகுதிகளை வலுப்படுத்தத் தூண்டுகின்றன.
- கனடா மற்றும் இந்தியா போன்ற "நடுத்தர சக்திகளை" பலவீனமாகக் கருதக்கூடாது என்றும், மாறாக, அவர்களின் பலம் கூட்டுப் பொருளாதார மீள்தன்மை மற்றும் வெளிப்படையான ஒத்துழைப்பில் உள்ளது என்றும் பிரதமர் கார்னி வலியுறுத்தினார்.
- ஒற்றைச் சந்தைகளை அதிகமாகச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான அதன் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, கடந்த ஆறு மாதங்களில் நான்கு கண்டங்களில் 12 வர்த்தக மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கனடா கையெழுத்திட்டுள்ளது.

கார்னியின் வருகை, பொருளாதாரம் மற்றும் எரிசக்தி பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, இந்திய-கனடா உறவுகளில் ஒரு "புதிய அத்தியாயத்தை" வெற்றிகரமாகத் தொடங்கி வைத்துள்ளது